
# செம்மணி

நிலம் 3 துகள் 135 வள்ளுவர் ஆண்டு 2052, 18 - 24 மாசி 2023 வாரமலர் பக்கங்கள் 14




தாரா

# பிரபாகரனை உயிர்ப்பித்தல்...!



2009 மே 18 அன்று இரவு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இறந்துவிட்டார் என்று செய்திகள் வெளியாகின. இறந்தது (சடலம்) பிரபாகரன்தானா என்பதை உறுதிப்படுத்தப் புலிகளின் முன்னாள் தளபதியான கருணா அம்மானையும் புலிகளின் ஊடகப் பொறுப்பாளராகவிருந்த தயா மாஸ்ரரையும் அந்த இடத்துக்கு அழைத்துச்சென்று சடலத்தைக் காட்டியபோது அது பிரபாகரனினுடையதுதான் என்று அவர்கள் உறுதிப்படுத்தினர். தமக்காகப் போராடி உயிர்நீத்த நிலையில் அந்தச் சடலம் குறித்து ஈழத்தவர்களோ, தமிழ்நாட்டவர்களோ வாய் திறந்திருக்கவில்லை. அது பிரபாகரன்தானா...? பிரபாகரன் என்றால் சடலத்தைக் காட்டுங்கள்...? இப்போது அந்தச் சடலம் எங்கே வைக்கப்பட்டுள்ளது....? போன்ற எவ்வித கேள்விகளையும் எழுப்பவில்லை. எல்லாம் நடந்து இப்போது 13 வருடங்கள் கழிந்த பின்னர் பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்று ஊடகங்களுக்குப் பர பரப்புத் தகவல் ஒன்றை வழங்கியிருக்கிறார் பழ நெடுமாறன்.

**கருணா கூறியது என்ன**

தனது தனிப்பட்ட உரையாடல் ஒன்றின்போது பிரபாகரனின் சாவு பற்றிக் கருணா அம்மான் கீழ்வரு

மாறு குறிப்பிட்டார். இந்தியச் சாஸ்திரி ஒருவர் கூறியிருந்தார் இந்தக் காலகட்டம் பிரபாகரனுக்கு மிகவும் கெட்ட காலம். இந்தக் காலப் பகுதியைத் தாண்டிவிட்டால் இப்போதைக்கு அவருக்கு மரணமில்லை என்று. ஆனால் இப்படி நடக்கும் என்று நானும் எதிர்பார்க்கவில்லை - என்பதாக.

**பிரபாகரனின் சடலம் என்பதைக் கருணா அம்மானும் தயா மஸ்ரரும் உறுதிப்படுத்தியது சரிதான் என்பதையே பலரது செயற்பாடுகளும் உணர்த்துகின்றன.**

**சிங்களவரின் சந்தோசம்**

பிரபாகரன் உயிருடன் இருக்கும்வரை தாம் நிம்மதியாக வாழமுடியாது என்பதை நன்கு தெரிந்திருந்த சிங்கள மக்கள் பிரபாகரன் இறந்துவிட்டார் என்பதால் பெரு நிம்மதி அடைந்தார்கள். போர் வெற்றியைக் கோலாகலமாகக் கொண்டாடினார்கள். அதன் பின்னர் இப்போதுவரை மிகச் சந்தோஷமாக இருக்கிறார்கள். பிரபாகரன் இறந்துவிட்டார் என்பதையே சிங்கள மக்களின் செயல்கள் காட்டுவதாக இருக்கின்றன. இதைவிட இறுதிப் போரின்போது புலிகளிடமிருந்து பெறப்பட்ட காணொளிக் காட்சிகள் பலவற்றைச் சமூக வலைத்தளங்களில் காட்டிச் சிங்கள மக்கள் மத்தியில் இன்றுவரை பரப்புரை செய்யப்பட்டு வருகிறது. அவற்றின்மூலம் பிரபாகரனும் அவரது சகாக்களும் எப்படி வாழ்ந்தார்கள், போரிட்டார்கள் போன்ற விடயங்கள் சிங்கள மக்களுக்குச் சொல்லப்படுகின்றன.

**நெடுமாறன் கூறும் விடயம்**

ஐரோப்பிய நாடொன்றில் வாழ்கின்ற முன்னாள் போராளி ஒருவர் ஒரு சில மாதங்களுக்கு முன்னர் சமூக வலைத்தளப் பதிவு ஒன்றில் இவ்வாறு கூறினார். தலைவரையும் அவரது குடும்பத்தினரையும் பொட்டு அம்மானையும் கடந்த 13 ஆண்டுகளாக ஒரு சிலர் பராமரித்து வருவது என்பது மிகவும் கடினமான காரியம்தான். அவர்களுக்குத் தற்போது மருத்துவத் தேவையிருப்பதாகக் கூறி இரகசியமாக ஒரு குழுவினர் பணம் வசூலித்து வருகிறார்கள். மக்கள் இதுவிடயத்தில் ஏமாற வேண்டாம். அவ்வாறானவர்களுக்குப் பணம் கொடுக்க வேண்டாம் என்று எச்சரித்திருந்தார்.

பின்னர் பிரபாகரனின் மகள் என்று கூறப்படும் துவாரகா என்று தன்னை அடையாளப்படுத்திக்கொள்ளும் பெண் ஒருத்தி முகத்தை மூடியவாறு ஒரு சிலரைச் சந்திக்கிறார் என்ற செய்தி வெளியாகியது. அதன் பின்னர் புலிகளின் மூத்த போராளி ஒருவர் அந்தப் பெண்ணைச் சந்தித்தார். துவாரகாவுக்கு அவரை நன்று தெரிந்திருந்தது. அவரைக் கண்டதும் பெயர் சொல்லி அழைக்கக்கூடிய நிலையில்தான் துவாரகா இருந்தார். ஆனால், துவாரகா என்று கூறிக்கொள்ளும் இந்தப் பெண்ணுக்கு அவரைத் தெரியவில்லை. அவர் அந்தப் பெண்ணிடம். உங்களுக்கு வாகனம் செலுத்தக் கற்றுத் தந்தது யார் என்று கேட்க அந்தப் பெண் எனக்கு அவரது பெயர் மறந்துவிட்டது என்றுள்ளார். நன்றாக யோசித்துப் பாருங்கோ என்று சொல்ல அவர் ஒரு நபரின் பெயரைக் கூறினார். சந்திக்கச் சென்றவர் இது பொய்யான விடயம் அந்தப் பெண் துவாரகா அல்ல. அவருக்கு வாகனம் செலுத்தப் பழக்கியது முன்னாள் போராளின் மனைவி என்றார். இவ்வாறான சில விடயங்களே பழ நெடுமாறன் குறிப்பிடும் தலைவரின் குடும்பம், தலைவர் உயிருடன் இருக்கிறார் ஆகிய செய்திகளின் பின்னணியில் இருப்பதாகத் தெரிகிறது.

**தமிழ் அரசியல் தலைவர்களின் நிலைப்பாடு**

பிரபாகரன் இறந்து விட்டார் என்று கருணா அம்மான் கூறியதை வைத்து 2010 இல் தேர்தலில் தமிழ் அரசியல் தலைவர்கள் அனைவரும் களமிறங்கினார்கள். அப்போதைய அரசதலைவர் மகிந்தவுக்குப் போரை முடிவுக்குக் கொண்டு வந்ததற்கு நன்றியும் கூறினார் சம்பந்தன். கொழும்புக்கும் திருகோணமலைக்கும் அச்சமின்றி சென்றுவரும் வாய்ப்பை வழங்கியதற்கும் நன்றி கூறினார். இது பிரபாகரன் நிச்சயம் இறந்துவிட்டார் என்ற விடயத்தை உறுதிப்படுத்திய பின்னர் அவர் சொன்னவையே. இறுதிப்போரின்போது மக்கள் படுகொலை செய்யப்பட்டார்களா என்ற விடயத்தில் புலிகளும் விசாரிக்கப்பட வேண்டும். அங்கு இன அழிப்பு நடந்ததா என்பதை விசாரணைகளின் பின்னரே உறுதிப்படுத்த முடியும் என்று சுமந்திரன் துணிந்து கூறக் காரணம் பிரபாகரன் இறந்துவிட்டார் என்பதை அவரும் உறுதிப்படுத்தியமையே.

பிரபாரகரனின் வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன் என்று தற்போது கூறும் சிறீதரன் புலிகளுக்கு எதிரான ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியை 2010ஆம் ஆண்டில் தொடர்புகொண்டு தேர்தலில் இறங்கியது பிரபாகரன் இறந்துவிட்டார் என்பதை உறுதிப்படுத்திய பின்னரே.

பிரபாகரன் இறந்து விட்டார் என்பதைக் கருணா உறுதியாகக் கூறியிருக்காவிட்டால் தற்போது கருத்து வெளியிடும் தலைவர்களில் பலர் பிரபாகரனின் உயிர்ப்புச் செய்தியுடன் நாட்டைவிட்டு ஓடியிருப்பார்கள். அவர்கள் அவ்வாறு செய்யவில்லை என்பதும் பிரபாகரன் இறந்துவிட்டார் என்பதை உறுதிப்படுத்தக்கூடிய மற்றோர் சான்றாகும்.

**முஸ்லிம் தலைவர்களின் உற்சாகம்**

ரவூப் ஹக்கீம், றிசாட் பதியுதீன் ஆகியோர் இலங்கை ஆட்சியாளர்களுடன் மிக நெருங்கிப் பழகி மிகவும் சந்தோசமாக இருக்கக் காரணம், பிரபாகரன் இறந்துவிட்டார் என்பதை உறுதிப்படுத்திய பின்னரே. புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்த காலத்தில் கருணாவை மட்டக்களப்பில் இருந்து கொழும்புக்கு அழைத்துச் சென்றவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அலி ஷாகிர் மௌலானா. 2004 இந்தச் சம்பவத்தின் பின்னர் புலிகள் தன்னைக் கொல்வார்கள் என்ற பயத்தில் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றார். பிரபாகரன் இறந்துவிட்டார் என்று கருணா உறுதிப்படுத்திய பின்னரே அவர் நாட்டுக்கு வந்தார். பிரபாகரனின் சடலம் என்பதைக் கருணா அம்மானும் தயா மஸ்ரரும் உறுதிப்படுத்தியது சரிதான் என்பதையே பலரது செயற்பாடுகளும் உணர்த்துகின்றன. இவற்றை யெல்லாம் மீறிப் பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்று பழ நெடுமாறன் கூறுவதை நம்புவது சிரமமாகவே உள்ளது.

# ஏன்...?

# அப்படி...?

நட்சத்திரா

45





## அகத்தியை வீட்டுக்குப் பின்னால் நடுவதேன்...?

"அகத்தி ஆயிரம் காய் காய்த்தாலும் பிறத்தி பிறத்தியே" என்று தமிழில் ஒரு முதுமொழியுண்டு. அதன் அர்த்தம் என்னவென்றால், எவ்வளவுதான் காய்த்தால் கூட அகத்தியைப் பின்னுக்கே நடவேண்டும் என்பது தான்.

பல்வேறு மரங்கள் காய்க்கின்றன. அந்தக் காய்களை உண்ண முடிகிறது. காய்களை உண்ணமுடியாவிட்டால் பழமாகியதும் உண்ணலாம். உதாரணத்துக்கு முருங்கைக் காய் கறி வைக்கப் பயன்படுகிறது. ஆனால் அகத்திக் காயில் கறி வைப்பதில்லை. பழமாக உண்பதும் இல்லை. இதன் காரணமாகவே அகத்தியைப் புறமொதுக்கும் பழக்கம் உண்டாயிற்று. அதனாலேயே அகத்தி ஆயிரம் காய் காய்த்தாலும் பிறத்தி பிறத்தியே என்று கூறப்படு கிறது.

இதைவிட அகத்தி மரத்தை வீட்டுக்கு முன்னால் நடாமல் பின்புறமாக நடுவதையும் இது குறிக்கிறது. அகத்தியை வீட்டுக்கு முன்னால் வைக்காது பின் புறத்தியிலேயே வைக்கப்படுகிறது. வீட்டுக்கு வருபவர்களின் கண்களில் படும்படியாக நட்டால் வருபவர்கள் அதில் அடிக்கடி இலை ஒடித்துக்கொண்டு போக வாய்ப்பிருக்கும் இதனால் அதை வீட்டுக்கு முன்னால் நடாது தவிர்த்தனர். அவ்வாறு நட்டால் அந்த மரம் வீட்டுக்காரருக்குப் பயன்படாது போய்விடும்.

அகத்தியின் இலை இரவு நேரங்களில் ஒடுங்கி உறக்கத்தில் இருக்கும். அல்லது தொட்டாற் சுருங்கிபோல வாடியிருக்கும். இதே நிலையிலேயே புளியம் இலைகளும் இருக்கும். இரவில் ஒட்சிசனை வெளியிடாது காபனீர் ஒட்சைட்டை வெளிவிடும் மரங்களே அவ்வாறு இருப்பதால் அது சூழலுக்கு ஆரோக்கியம் அல்ல என்பதால் அகத்தியை வீட்டுக்கு முன்னால் நாடுவதைத் தவிர்த்திருக்கலாம். இத்தகைய காரணங்களால்தான் அகத்தியை வீட்டுக்கு முன்னால் நடுவதில்லை.

96

சிறைக்குள்...



## "ரணில் ஐயா எல்லாம் நல்ல மாதிரிக் கொண்டுவந்து விடுவார்..."

தர்மராசா

அப்போது அநுராதபுரச் சிறையில் கறுப்பு வெள்ளை நிறத்தில் படம் காட்டும் 14 அங்குலமுடைய தொலைக்காட்சிப் பெட்டி ஒன்று இருந்தது. அதில் காட்சிகள் தெளிவாகத் தெரியாது. புள்ளிப் புள்ளியாகத் தெரியும் புள்ளிகளைத் தெளிவுபடுத்தி அதற்குள் உள்ள உருவங்களைக் கண்டுபிடிக்கும் வல்லமை பல கைதிகளுக்கு இருந்தது. இது அவர்களுக்கிருந்த ஓர் அபார சக்தி எனலாம். முன்பெல்லாம் அனுராதபுரச் சிறையிலிருந்த தண்ணீர்த் தட்டுப்பாடு தற்போது இருக்கவில்லை. இரவு நேரம் தண்ணீர் திறந்துவிடப்பட்டதும் உள்ளே இருக்கும் பெரிய தண்ணீர்த் தொட்டி நிறைந்துவிடும். நிறைந்ததும் அந்தக் குழாயைப் பூட்டும்படி பல தடவைகள் சிறைச்சாலை ஊழியர்களிடம் கூறவேண்டியிருந்தது. அவர்கள் தண்ணீரை அதிக நேரம் திறந்துவிடுவதால் மேல் மாடியில் இருந்த தொட்டி நிறைந்து நீர் வழிந்தோடுவது வழமையாகியது.

23.5.2002அன்று காலையில் களுத்துறைச் சிறைக்குப் போவதற்குத் தயாரானோம். காலை 5.30மணியளவில் காலை உணவாகப் பாண் தந்தார்கள். உடனேயே சாப்பிட்டேன். சம்பலுடன் பாணைச் சாப்பிட்டதால் வயிற்றுக் குழப்பமாக இருந்தது. மீண்டும் ஒரு தடவை கழிப்பறைக்குள் போனபோது களுத்துறைக்குப் போகிறவர்கள் வாருங்கள் என்று சிங்களத்தில் கூவி அழைப்பது கேட்டது. கழிப்பறைக் கதவுக்கு வெளியே ஓடிவந்து காற்சட்டையைக் கதவுக்கு வெளியே வந்து அவசரமாகப் போட்டுக்கொண்டேன்.

நாங்கள் புறப்பட்டபோது அங்கிருந்த பல நண்பர்கள் கம்பிக் கதவுக்கு அருகில் நின்றுகொண்டு களுத்துறையிலுள்ள தமது நண்பர்களுக்குச் சொல்ல வேண்டிய செய்திகளை ஞாகபக்கடுத்திக் கொண்டார்கள். சிறையில் கதைப்பதுதான் முக்கிய வேலையாக இருப்பினும் கதை முடிவதில்லை. கடைசி நேரத்திலும் கதைப்பதற்கு ஏதாவது எஞ்சியிருப்பது அதிசயம்தான்.

மாலை 3 அளவில் களுத்துறைச் சிறைக்குப் போய் சேர்ந்தோம். அதற்கு முன்னதாகக் களுத்துறைச் சிறைக்குப் போய்ச் சேரக்கூடாது என்பதில் சாரதியும் அதிகாரிகளும் குறியாக இருந்தார்கள். அதற்காக பேருந்தை ஓட்டுவதும் உருட்டுவதுமாகச்

# "எனது சடலம் என்று சொல்லி வேறொரு சடலத்தை ஒப்படைத்தனர்"



படைத்தரப்பைச் சேர்ந்த இருவர் புலிகளிடம் கைதிகளாக இருக்கின்றனர், அவர்களை விடுவிப்பதற்கு முயற்சிகளை எடுக்குமாறு தென்னிந்தியத் திரைப்பட நடிகர் எம்.ஜி.ஆர். சிங்கள நடிகரான விஜயகுமாரணதுங்கவிடம் கூறினார் என்று விஜயகுமாரணதுங்க, பீலிக்ஸ் பெரேரா, ஓ.சி.அபய குணவர்த்தன ஆகியோர் என்னைச் சந்தித்து உரையாடியபோது சொல்லினர். எங்களைச் சந்தித்த பின் எங்கள் குடும்ப விவரங்களைப் பெற்று அவர்கள் எமது குடும்பத்தவர்களையும் சந்தித்தார்கள்.

**மொழியாக்கம்**
**கமலநாதன்**

விஜயகுமாரணதுங்க எனது வீட்டுக்குச் சென்றபோது எனது சடலம் அடக்கம் செய்யப்பட்டு அதற்கான சடங்கு ஒன்றை எனது குடும்பத்தினர் செய்து கொண்டிருந்தனர். நான் உயிருடன் இருக்கிறேன் என்று அவர் கூறிய பின்னரே எனது சடலம் என்று ஒப்படைக்கப்பட்ட சடலம் வேறொரு சிப்பாயினுடையது என்று தெரியவந்தது. விஜயகுமாரணதுங்க இன்று உயிருடன் இல்லாது விட்டாலும் அவரை ஒருபோதும் மறக்கமுடியாது.

### சுபாஸ் ஹோட்டலில் சந்திப்பு

விஜயகுமாரணதுங்க, ஓ.சி.அபயகுணவர்த்தன ஆகியோர் கைதிகளாக இருந்த எம் இருவரது குடும்பங்களில் இருந்து 30பேரை அழைத்து வந்து யாழ்ப்பாணம் சுபாஸ் ஹோட்டலில் எங்களையும் அவர்களையும் சந்திக்க வைத்தார்கள்.

எங்கள் இருவருக்கும் பதிலாக ஏற்கனவே கைது செய்யப்பட்டுச் சிறையிலிருந்த புலிகளில் இருவரைக் கைதிகள் பரிமாற்றமாக மாற்றித் தருமாறு புலிகள் விஜயகுமாரணதுங்கவிடம் கேட்டார்கள். சுபாஸ் ஹோட்டல் சந்திப்பின்போது விஜய குமாரணதுங்க இது பற்றி எங்களுக்கும் எங்கள் குடும்பத்தினருக்கும் கூறினார். அது பெரும் நிம்மதியாக இருந்தது.

சாரதி தனது திறமையைக் காட்டினார். 3மணிக்குப் பின்னர் சென்றால்தான் அவர்களுக்கு அந்தப் பயணத்துக்குரிய மேலதிக-பிரத்தியோகக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்று அறிய முடிந்தது.

பி6 வார்ட்டுக்குப் போனபோது புதிதாக மாற்றம் ஏதும் இருக்கவில்லை. பழைய நண்பர்கள் ஓடிவந்து கதைத்தார்கள். நான் அங்கில்லாத ஒரு மாதத்துக்குள் 15பேர் வரை பி பிரிவிலிருந்து விடுதலை ஆகிவிட்டதை அறிந்தேன். நீண்டகாலம் சிறைக்குள்ளிருந்த சேரன் என்ற நண்பரும் விடுதலையாகியிருந்தார்.

25.5.2002அன்று எனக்குப் பாட்டி போடப்பட்டது (சுத்தம் செய்யும் வேலை) முதல் நாள் பூட்டப்பட்டவுடன் பி 6 பகுதிக்குள் இருக்கும் சிறிய கரும் பலகையில் மறுநாள் பாட்டி செய்பவரின் இலக்கம் எழுதப்படும். காலையில் கழிப்பறைகளைச் செங்கல்போட்டு உரஞ்சினேன். மிகுதி வேலைகளை எமது சங்கத்தில் இருந்த நாதன் என்னுடன் சேர்ந்து செய்தார். இதுகூட ஒரு நாளைச் சிறைக்குள் கழிப்பதற்கு வாய்ப்பாக இருந்தது. அப்போதெல்லம் களுத்துறைச் சிறையில் இருந்த கைதிகள் அங்கிருந்து விடுதலையாகிப் போன நண்பர்கள் பற்றியே அதிகம் கதைத்தார்கள். அவர்களைப் பற்றிய ஏக்கம் அனைவரது மனங்களில் இருப்பது புரிந்தது.

27.5.2002அன்று நானும் இரு கைதிகளும் போகம்பரைக்கு எஸ்கொட் போனோம். பகல் 1மணியளவில் அங்கு போய்ச் சேர்ந்தபோது அங்கிருந்த பொறுப்பதிகாரி ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளராக இருந்தார். எங்கள் 3பேரையும் அன்போடு அழைத்துச் சென்று பாய், கோப்பை, துவாய்கள், தகர வாழிகள் எல்லாம் களஞ்சியத்திலிருந்து பெற்றுத் தந்தார். "நீங்கள் விரைவில் விடுதலை ஆகிவிடலாம்... இப்பதான் சண்டையில்லையே... ரணில் ஐயா எல்லாம் நல்ல மாதிரி கொண்டு வந்துவிடுவார்" என்றார்.

குசினிக்குள் அழைத்துப்போய் நல்ல சாப்பாடு போடும்படி கூறிவிட்டு அவர்கள் சாப்பாடு போடுவதை அவதானித்தார். 13ஆம் இலக்க அறைக்குள் எங்கள் மூவரையும் தடுத்து வைத்தனர். அன்று மாலை போகம்பரையில் பக்திரீ (பக்தி கீதம் - வெசாக் போசோன் காலத்தில் பௌத்த இடங்களில் பாடப்படுகின்ற புத்த பகவானைப் பற்றிய துதிப்பாடல்கள்) நிகழ்வு நடந்தது. எல்லாப் பகுதிகளில் உள்ள கைதிகளும் அங்கு கொண்டுவரப்பட்டிருந்தார்கள். சிறைக்குள் திருவிழா நடப்பதுபோல இருந்தது. எனக்குத் தெரிந்த பல சிங்களக் கைதிகள் வேறு பிரிவுகளில் அடைக்கப்பட்டிருந்தனர். இதன்போது அவர்களைச் சந்திக்க முடிந்தது. அவர்கள் எனது வழக்குப் பற்றி விசாரித்தார்கள். விரைவில் விடுதலையாகிவிடலாம் என்று ஆறுதல் கூறினார்கள்.

சிங்களக் கைதிகளாக இருப்பினும் பழகிவிட்டால் நல்லபடி நடந்துகொள்வார்கள். அதிலும் துவேசமான ஒரு சிறு குழுவினர் இருக்கத்தான் செய்தார்கள். (தொடரும்)

**கைதிகள் பரிமாற்றம்**

எங்கள் இருவரையும் மண்டை தீவு படை முகாமுக்குப் பொறுப் பாகவிருந்த கேணல் கொத்தலா வலவிடம் யாழ்ப்பாணக் கோட் டையில் வைத்துக் கையளிப்பது என்றும் அதேநேரம் புலிகளின் கைதிகள் இருவரை வசாவிளானில் வைத்துப் புலிகளிடம் ஒப்படைப் பது எனவும் ஏற்பாடுகள் நடந் திருந்தன. அதன்படி எம்மைக் கோட்டையில் வைத்துக் கொத்த லாவலவிடம் கையளித்தபோது வாக்கிடோக்கி மூலம் வசா விளா னில் விடுவிக்கப்பட்ட தமது உறுப்பினர்கள் பற்றிப் புலிகள் உறுதிப்படுத்திக்கொண்டார்கள்.

நாங்கள் விடுவிக்கப்பட்டு மண்டைதீவு முகாமுக்கு அழைத் துச் செல்லப்பட்டோம். அங்கு நாடாளுமன்ற உறுப்பிரான வின் சன் பெரேரா எம்மை வரவேற்ப தற்குக் காத்திருந்தார். மண்டை தீவிலிருந்ர்து பலாலிக்கு உலங்கு வானூர்தி மூலம் அழைத்துச்செல் லப்பட்டு அப்போதைய பாது காப்ப அமைச்சரான லலித் அத்து லத் முதலிலியைச் சந்திக்க வைத் தார்கள். பின்னர் எங்களைப் பலாலியில் இருந்து ரத்மலானை வானூர்தி நிலையத்துக்கு வானூ ர்தி மூலம் அனுப்பி வைத்தார்கள்.

என்னுடன் புலிகளிடம் அகப் பட்ட மற்றவர் அதிகாரியாக இருந்தபோதிலும் தன்னை ஒரு சிப்பாயாகவே புலிகளுக்கு அறி முகப்படுத்தியிருந்தார். அவர் மொரட்டுவவைச் சேர்ந்த லெப்ரி னன் சந்திரசிறி. அவரை விடு வித்த பின்னர்தான் புலிகளுக்கு அவர் ஓர் அதிகாரி என்று தெரிந் திருக்கும். அந்த விடயம் முன் னரே தெரிந்திருந்தால் புலிகள் அவரை விடுவித்திருக்க மாட்டார் கள்.

புலிகள் கைதிகள் பரிமாற்றத் தின் மூலம் மாற்றிக்கொண்ட இரு கைதிகளில் ஒருவர் புலிகளின் தளபதிகளில் ஒருவரான அருணா. அவரது சொந்தப் பெயர் பலருக் கும் தெரியாத நிலையில் தளபதி கிட்டுவால் விடுவிப்பதற்குத் தெரிவு செய்யப்பட்ட இருவரில் ஒருவர் அருணா என்பது படைத் தரப்புக்கும் தெரிந்திருக்கவில்லை. இதனால் அருணாவும் மிகச் சாதா ரணமாக விடுவிக்கப்பட்டார்.

# பிரபாகரனுக்கு மட்டுமே பயந்தார்கள்...!



நியூட்டன்

**2009**க்கு முன்னரான **30**ஆண்டுகள் சிங்களவரின் வரலாற்றில் மிகவும் கொடுமையான காலப்பகுதியாகக் காணப்பட்டது. எந்த நேரத்தில் எங்கு வைத்துக் கொல்லப்படு வோமோ என்ற அச்சம் சாதாரண சிங்கள மக்கள் தொடக்கம் அரச தலைவர் வரைக்கும் இருந்தது. பிரபாகரனின் சாவு வரைக்கும் தமக்கு வாழ்வில்லை என்பதை ஒட்டுமொத்த சிங்கள இனமும் உணர்ந்திருந்தது. **2009**இல் பிரபாகரன் இறந்த பின்னர் எந்தத் தமிழனுக்கும் சிங்க ளவர்கள் பயந்ததில்லை. பெரும் சிரமப்பட்டு, இழப்பு களைச் சந்தித்துப் பெற்ற **2** ஆவது சுதந்திரம்தான் அவர்கள் பிரபாகரனைக் கொன்றமை. அதன் பின்னர் தமிழ்த் தலைவர்களால் சிங் களவர்களுக்கு எதிராக முன்னெடுத்த எந்த எதிர்ப் பையும் பிரபாகரனின் எதி ர்ப்புடன் ஒப்பிடும் போது சிங்களவர் ஒரு பொருட் டாகக் கருதுவதில்லை.

**பிரபாகரனை எவ்வாறு வெற்றி கொண்டார்கள்**

பிரபாகரன் எப்போதும் சிங்களவர்களுக்குச் சிம்ம சொப்பனமாக இருந்தார். இதற்குப் பல காரணிகள் இருந்தன. வேளாள சமூ தாயத்தைச் சாராத ஒருவ ராக அவர் இருந்ததால் சிங்களத் தலைவர்களிடம் இலகுவாகச் சமரசம் காண முற்படவில்லை. பல்கலைக்

# கிழக்கு மாகாண முஸ்லிம்களும் வடக்குக் கிழக்கில் குடியேறி வரும் சிங்களவர்களும் வடக்குக் கிழக்கு இணைப்புக்கு எதிராகவுள்ளனர்.

கழகப் பட்டம் பெறாத, நாடாளுமன்றம் சென்று அங்குள்ள சலுகைகளை அனுபவிக்க ஆசைப்படாத பிரபாகரனைச் சிங்களத் தலைவர்க ளால் இலகுவாகக் கையாள முடியவில்லை. பிரபாகரனைத் துப்பாக்கியால் மட்டுமே எதிர்கொள்ள வேண்டியிருந்தது. சிறந்த தனிமனித ஒழுக்கத்தையும் மக்களை நேசிக்கும் பண்பையும் படைக் கட்டமைப்பபையும் அவர் வைத்திருந்ததால் எல்லா முனைகளிலும் (தரை, கடல், வான்) அவரை முகம் கொடுக்க வேண்டிய இக்கட்டான நிலை சிங்களவர்களுக்கு இருந்தது. தமக்குச் சாவு என்பது தரையிலா? கடலிலா? வானிலா? என்பதைக்கூட ஊகித்து அறிய முடியாத நிலை சிங்களவருக்கு இருந்தது. அதனால் பல




வழிமுறைகளைக் கையாண்டு பிரபாகரனையும் அவரது படைக் கட்டமைப்பையும் அழிக்க வேண்டியிருந்தது. வெளிநாட்டு உதவிகளைப் பெற்றது மட்டுமல்லாது பிக்குகள், ஆசிரியர்கள், முப்படையினர், வடக்குக் கிழக்கு மாகாணங்களின் எல்லைப்புறச் சிங்கள மக்களும் இணைந்து பிரபாகரனைக் எப்படியாவது கொல்ல வேண்டும் என்பதில் ஒருமித்திருக்கும் அளவுக்குச் சிங்கள ஊடகங்களும் வழிப்படுத்தின. இந்தக் கூட்டுமுயற்சியின் பயனாகவே புலிகளின் அழிவு சாத்தியப்பட்டது. 2005இல் மகிந்த பதவியேற்றதும் புலிகளை அழிக்கும் விடயம் தீவிரமானது.

வெறும் 4ஆண்டுகளில் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. ஜெ.ஆர், ஜெயவர்த்தன, பிரேமதாச, சந்திரிகா ஆகிய அரசதலைவர்களால் சாதிக்க முடியாததை மகிந்த செய்துமுடித்தார். பிரபாகரனின் சாவின் பின்னர் சிங்கள மக்களிடமிருந்த உயிர் அச்சுறுத்தல் இல்லாது போயிற்று. பிரபாகரனுக்குப் பின்னர் வந்த வேட்டி கட்டிய தமிழ்த் தலைவர்களால் சிங்கள மக்களை அச்சுறுத்த முடியவில்லை.

**வடக்குக் கிழக்கு இணைப்பு சாத்தியமில்லை**


1987 ஜூலை 29இல் கைச்சாத்திடப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தம் மூலமே முதற் தடவையாக வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் தற்காலிகமாக இணைக்கப்பட்டன. 35ஆண்டுகள் பழமையாகிவிட்ட அந்த ஒப்பந்தம் வேறு பல சிக்கல்களுக்குள் உள்ளாகியுள்ளது. கிழக்கு மாகாண முஸ்லிம்களும் வடக்குக் கிழக்கில் குடியேறி வரும் சிங்களவர்களும் வடக்குக் கிழக்கு இணைப்புக்கு எதிராகவுள்ளனர். முஸ் அபரிமிதமான இனப்பெருக்கமும் தமிழரின் அச்சம் தரும் இனப் பெருக்க வுழ்ச்சியும் எதிர்காலத்தில் பாரிய விளைவுகளை இந்த விடயத்தில் ஏற்படுத்தவுள்ளன.

அண்மையில் ஓட்டுமாவடிப் பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்துக்குப் பொரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர் ஒருவரை அரச அதிபராக நியமிக்குமாறு கோரி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினார்கள். அது அவர்களுக்கான காணிப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்காகவே. எதிர்காலத்தில் தமிழருக்கு எதிரான சிங்களவர்களின் நிகழ்ச்சி நிரலில் அதுவும் கைகூட வாய்ப்புண்டு.

வடக்குக் கிழக்குத் தமிழரின் தாயக பூமி என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை. என்றாலும் 2009க்கு முன்னரும் பின்னரும் தமிழர்களின் தாயக பூமியைக் கபளீகரம் செய்தவர்கள் சிங்களவர் அல்ல முஸ்லிம்களே. இனிவரும் காலத்தில் தமிழர்கள் தமது இனப் பெருக்கத்திலும் கல்வியிலும் உழைப்பிலும் கவனம் செலுத்தாவிடில் சிங்களவர்களுக்கு அடுத்த படியாக முஸ்லிம்களுக்கு எதிராகவும் போராட வேண்டிய நிலை ஏற்படும். சிங்களவர் மாத்திரமல்ல முஸ்லிம்களும் பிரபாகரனுக்கு மட்டுமே பயந்தார்கள். இன்றைய தமிழத் தேசிய மற்றும் தமிழ்நாட்டுத் தலைவர்களும்கூடப் பிரபா கரனுக்குப் பயந்திருந்தார்கள் என்பதையே அவரில்லாத கடந்த 13 ஆண்டு காலப்பகுதியிலிருந்து உணர முடிகின்றது.

# இணைப்பாட்சி என்கிற சமஷ்டி!

"சமஷ்டியா தனிநாடா" என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைநாள் நவீன வரலாற்றுத்துறை விரிவுரையாளரான மு.திருநாவுக்கரசு அவர்களால் எழுதப்பட்ட நூல் இன்றைய காலகட்ட விவாதங்களுக்கு மிகவும் பயனுடையதாக அமையும். 2004ஆம் ஆண்டு வெளியாகிய இந்த நூல் சமஷ்டி - தோற்றமும் வளர்ச்சியும், சமஷ்டி - ஜனநாயகமும் சுயநிர்ணய உரிமையும், பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமையும் அதன் வரலாற்று நடைமுறையும், சமஷ்டி யாப்புகள் - அமெரிக்க சுவிஸ் அனுபவங்கள், இலங்கையில் சமஷ்டிக் கொள்கை ஆகிய அத்தியாயங்களை உள்ளடக்கியிருக்கிறது. 234 பக்கங்களைக் கொண்ட இந்த நூல் 2009ஆம் ஆண்டு அறிவு அமுது பதிப்பகத்தால் கிளிநொச்சியில் வெளியிடப்பட்டது. தீர்வு பற்றிய பேச்சுக்கள், கலந்துரையாடல்கள் இடம் பெறும் இந்தக் காலத்தில் அதன் ஐந்தாம் அத்தியாயத்தைச் செம்மண்ணில் வாசிக்கத் தருகிறோம்.




12

மு.திருநாவுக்கரசு

## இலங்கையில் சமஷ்டிக் கோரிக்கை

தமிழ்ப் பிரதேசங்களில் மாகாண சுயாட்சி ஏற்பட வேண்டும் அல்லது நாம் முற்றாகப் பிரிந்துபோக வேண்டும்" என்று 1955ஏப்பிரல் 17ஆம் திகதி நிகழ்ந்த தமிழ் அரசுக் கட்சியின் மூன்றாவது தேசிய மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருந்தது. அப்படி ஓர் எச்சரிக்கைத் தீர்மானத்தை நிறைவேற்றியிருந்த தமிழ் அரசுக் கட்சியைப் பிரதான அங்கமாகக் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணியானது அத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட இரு தசாப்தங்களின் பின்பு தான் முற்றாகப் பிரிந்து செல்வதற்கான தீர்மானத்தை எடுத்ததென்பது இங்கு குறிப் பிடத்தக்கது.


1950களின் மத்தியைத் தொடர்ந்து மொழியுரிமை, சமஷ்டிக் கோரிக்கை என்பனவெல்லாம் சாத்தியமற்றவை என்ற நிலை வளர வளர பிரிந்து செல்வதற்கான கோரிக்கைகளும் முகிழ்ந்து வந்தன. இப் பின்னணியில் பிரிந்து செல்லும் கோரிக்கையின் நிமித்தம் ஆயுதம் தாங்கிய அமைப்புகள் தோன்றின. இவற்றுள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அமைப்பு தனிப்பெரும் இயக் கமாய் எழுந்தது. சமஷ்டிக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதால் முற்றிலும் பிரிந்து செல் வதற்கான கோரிக்கை எழுந்தது. மேடை அரசியல் நிராகரிக்கப்பட்டதால் தலை மறைவரசியல் எழுந்தது. வாக்குகள் நிராகரிக்கப்பட்டதால் வேட்டுகள் பாயத் தொடங்கின. உள்நாட்டுப் பரிமாணத்தில் பிரச்சினையைத் தீர்க்கத் தவறியமை

யால் வெளிநாட்டுப் பரிமாணத்தை அது பெற நேர்ந்தது. இப்படியாகச் சமஷ்டிமுறை நிராகரிக்கப்பட்ட திலிருந்து அவை வேறு பல தர்க்க பூர்வ பரிமாணங்களைப் பெறலாயின. 1983ஆம் ஆண்டு இலங்கையின் இனப்பிரச்சினை வேகமாக வெளி நாட்டுப் பரிமாணத்தைப் பெறலா யிற்று. இதன் உச்சக்கட்டமாக 1987 ஜூலையில் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானது. இந்தப் பிரச்சினையின் முக்கிய பகுதியின ரான தமிழ்த் தரப்பினரின் கையெழுத் தின்றி இலங்கை, இந்திய இரு அரசுகளினதும் கையெழுத்துடன் ஒப்பந்தம் உருவானது. இந்த ஒப் பந்தம் சமஷ்டி முறைIயை ஏற்றுக் கொண்டதாக இருக்கவில்லை. ஒற் றையாட்சி முறையின் கீழ் தற்காலிக வடக்குக் கிழக்கு இணைப்புடன் ஒருவகைப் பிரதேச சுயாட்சிக்கு ஓரளவு வழிவகை செய்யக்கூடிய ஒப்பந்தமாய் அமைந்தது. இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த எடுத்த எந்த முயற்சிகளிலும் தமிழர் தரப்பு திருப்தி கொள்ள முடியாத இடங்களே இருந்தமையால் இந்திய இராணுவத்துக்கும் விடுதலைப்புலிக ளுக்கும் இடையில் யுத்தம் மூண்டு அது பேரழிவை ஏற்படுத்தியதாயும் இறுதியில் இந்திய இராணுவம் தோற் கடிக்கப்பட்டுத் திருப்பி அனுப்பப் படுவதாயும் அமைந்தது. ஒப்பந்த மும் முழுத் தோல்வி அடைந்தது.

பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம், இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஆகிய இவ்வொப்பந்தங்களினால் எதுவுமே சமஷ்டி முறையைக் கொண்ட ஒப்பந்தமாய் அமைய வில்லை. விகிதாரசாரப் பிரதிநிதித் துவ முறை ஐ.தே.காவிற்குச் சாதகமானதாய்க் காணப்பட்டதால் 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையும் கொண்டுவரப்பட்டது. இதனால் நாடாளுமன்றில் எந்த வொரு கட்சிக்கும் 2ஃ3பெரும் பான்மை கிடைக்க முடியாது போன துடன் சுதந்திரக் கட்சி தனித்துப் பதவிக்கு வரமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டது. இந்த நிலை ஐ.தே.காவுக்கும் பெருமளவு ஏற்பட்டது.

**1983ஆம் ஆண்டு இலங்கையின் இனப்பிரச்சினை வேகமாக வெளிநாட்டுப் பரிமாணத்தைப் பெறலாயிற்று. இதன் உச்சக்கட்டமாக 1987 ஜூலையில் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானது.**





தமிழர், முஸ்லிம், மலையகத் தமிழர் ஆகியோரின் ஆதரவு ஆட்சியமைக்கக்கூடிய இரண்டிலொரு கட்சிக்கு அவசியம் என்ற நிலை உருவானது.

மேலும் நிறைவேற்றதி காரம் கொண்ட ஜனா திபதிக்கான தேர்தலில் பௌத்த சிங்களவர் தவிர்ந்த மேற்படி இனங் களின் வாக்குகள் தீர் மானகரமான வாக்கு களாய் அமைந்தன. எனவே ஜனாதிபதித் தேர்தலில் ஈடுபடும் எந்தவொரு கட்சிக ளுக்கும் தமிழர், முஸ் லிம், மலையகத் தமிழர் ஆகிய தரப்பினரின் வாக்குகள் அவசியப்ப டுவதால் தேர்தல் களங்களில் இவ்வினங்கள் சக்தி மிக்கனவாகத் தொடங்கின.

(தொடரும்)

# வாழ்ந்த காலச் செலவை விஞ்சும் நோய்க்காலச் செலவு...!

**ரவீந்திரன்**




இன்று யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது இலங்கையின் பல பகுதிகளிலும் நோய்களுக்கான மருத்துவச் செலவும் அது சார்ந்த செலவுகளும் சடுதியாக அதிகரித்திருக்கின்றன. அதிலும் யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் மருத்துவமனைகளில் தமது பணத்தை நம்மவர்கள் வாரியிறைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

நிரந்தர நோயாளியை அல்லது வயதானவரைப் பராமரிப்பது என்பது அவர்தம் குடும்பத்தினருக்குப் பெரும் சுமையாக இருக்கிறது. இவ்வாறான நிலையிலுள்ளவர்களின் பிள்ளைகள் பெரும்பாலும் வெளிநாடுகளில் இருப்பதால் அவர்களைப் பராமரிப்பதற்கு வேறு நபர்களை நம்பியிருக்க வேண்டியுள்ளது. இவ்வாறான நோயாளர்கள் குடும்பங்களுக்குச் சுமையாக இருக்கிறார்கள். "அவர் எப்போது செத்துத் தொலைவார்?" என்ற மனநிலையில் அந்தக் குடும்பத்தினர் இருக்கின்றனர். ஆனால், நோயுற்றவரின் மன நிலையோ, "என்னை எப்படியாவது காப்பாற்றுங்கோ" என்ற எதிர்பார்ப்பில் உள்ளது.

நீரிழிவு, இருதய நோய்கள், முழங்கால் தேய்வு, முதுகெலும்பு பிரச்சினைகள், சிறுநீரக நோய் என மாற்ற முடியாத பொதுவான நோய்களை வைத்தே மருத்துவர்களும் தனியார் மருத்துவமனைகளும் அதிகம் சம்பாதித்து வருகின்றன. இதைவிட குறிப்பிட்ட மாறா நோய்களுக்கான தீர்வாகத் தனியார் மருத்துவமனைகள் உண்டு என்று தமிழ்த் தொலைக்காட்சித் தொடர்களில் திட்டமிட்டுப் போதிப்பதால் ஒரு தடவையாவது தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவிட வேண்டும் என்று நோயுற்றவர் விரும்புகிறார். இதனால், சாவு நிச்சயமான நிலையில்கூட இறுதி நாள்களில் பல லட்சங்களை இழக்க வேண்டிய நிலை பல குடும்பங்களுக்கு ஏற்பட்டுள்ளது. குறித்த நபர் ஒரு வாரத்திலோ மிக அண்மையிலோ இறந்துவிடுவார் என்று மருத்துவர்களுக்கும் தெரிய வந்தாலும் அதுவரை பணம் உழைக்கும் இயந்திரமாக நோயுற்றவர் பயன்படுத்தப்படுகிறார்.

**தனியார் மருத்துவமனைகளின் விசாரிப்பு**

யாழ்ப்பாணத்தில் நோயாளியைத் தனியார் மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லும்போது நோயின் வரலாற்றைக் கேட்டறிந்து பதிவு

செய்வதைவிட நோயாளியின் குடும்ப, வருமான விவரங்களையே அதிகம் கேட்டறிகின்றனர். இதன் மூலம் நோயாளியின் பொருளாதாரப் பின்னணி என்னவென்று தேடி அதன் அடிப்படையிலேயே சிகிச்சை நடக்கிறது. நோயாளிக்கு எத்தனை பேர் வெளிநாட்டில் இருக்கின்றனர். எவ்வளவு பணம் கறக்க முடியும். ஓய்வூதியம் உண்டா. அவருக்குக் காப்புறுதிப் பணம் கிடைக்க வாய்ப்புண்டா என்றெல்லாம் ஆராய்ந்த பின்னரே தமது மருத்துவமனையில் அனுமதிக்கின்றனர். பணம் வரும் வழி, பின்னணி ஆகியன சரியாக இல்லை என்றால் "நீங்கள் அரச மருத்துவமனையில் அவரைச் சேர்ப்பது தான் நல்லது" என மிக விநயமாக, தந்திரமதாகத் தவிர்த்து விடுகின்றனர்.

**நாசுக்காக, இவர் கனகாலம் உயிர்வாழ மாட்டார் என்று கூறாமல் "அவர் விரும்புகிற சாப்பாட்டைக் குடுங்கோ பிரச்சினையில்லை" என்பர்**

தனது கவிதை ஒன்றில் "சாவிலும் வாழ்விருந்த கிராமம்" என்று இதையே வர்ணிக்கிறார்.

**பராமரிப்பாளர்களின் தொல்லை**

தற்போது பல தனியார் மருத்துவமனைகள் தமது அணியினரை ஊர் ஊராக அனுப்பித் தமது சேவையை விளம்பரப்படுத்தி வருகின்றன. காயத்துக்கு மருந்து கட்டுவது, ஊசி போடுவது, பராமரிப்புச் சேவை எனப் பல விடயங்களை அறிமுகப்படுத்துகின்றனர். மருத்துவரை வீட்டுக்கு அழைத்து வந்து நோயளியைப் பார்க்கும் ஏற்பாடுகளும் உண்டு. ஆனால் இவ்வளவு பணம் தேவை என்கின்றனர். ஆள் உதவியில்லாத பண வசதியுள்ள குடும்பங்களே அவ்வாறானவர்களின் இலக்காக உள்ளன. பம்பஸ் போடுவது, குளிக்க வைப்பது, மருந்து போடுவது போன்ற பணிகளுக்காக நாளாந்தம் 3ஆயிரம் ரூபா வரை பணம் கேட்பதுண்டு. தமக்கான உணவு, போக்குவரத்து, தொலைபேசிச் செலவுகள், மோட்டார் சைக்கிள் செலவு ஆகியவற்றை அந்தக் குடும்பங்களின் தலைகளில் கட்டுவது போன்ற புதிய வகை உழைப்புகளையும் மேற்கொண்டு வருகின்றனர். அதேவேளை வீட்டுச் சூழலை நோட்டம் விட்டு வீடுகளில் களவு எடுக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

**அரச மருத்துவமனையும் மருத்துவர்களும்**

பல வயோதிபர்கள் தனியார் மருத்துவமனைகளில் சேர்க்கபட்டுப் பல லட்சங்களைப் பகற் கொள்ளைபோல அவர்களிடமிருந்து கறந்துவிட்டு அவரது உறவினர்களின் கையில் பணம் குறையும்போது நீங்கள் இவரை அரச மருத்துவமனையில் சேர்ப்பதுதான் நல்லது என அங்கு கடமையிலிருக்கும் மருத்துவர் கூறுகிறார். கையோடு அரச மருத்துவமனையிலும் பணிபுரியும் அவர் அங்கு தனது பொறுப்பிலுள்ள விடுதியைக் குறிப்பிட்டு அங்கு சேருங்கள், நான் பார்த்துக்கொள்கிறேன் என்று கூறி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு உள்வாங்கி பின்னர் ஓரிரு நாள்களில் சடலமாக உறவினரிடம் கையளிக்கின்றனர். மனிதன் இறக்கும் தருவாயில்கூட பல லட்ச ரூபாய்களை தனியார் மருத்துவத்துறையினருக்கு உழைத்துக் கொடுத்துவிட்டு இறக்கும் நிலையும், இறக்கும் தருணத்தைப் பயன்படுத்திப் பணம் உழைக்கும் அவல நிலையுமே இங்கு காணப்படுகிறது.

**அவர் விரும்புறதைச் சாப்பிடக் கொடுங்கோ**

1980கள் வரை உள்ளூர்களில் பல பிரதேச மருத்துவ நிலைய மருத்துவர்கள் (ஆர்.என்.பி. டொக்ரர், ஏ.என்.பி, டொக்ரர்) இருந்தார்கள். நோயாளி இன்னும் எவ்வளவு காலம் உயிர்வாழ வாய்ப்புண்டு என்பதைக் நாடி பிடித்தும், கண் மடல் பார்த்தும் நாக்கை நீட்டிப் பார்த்தும் ஊகித்து விடுவர். அதன் பின்னர் நோயாளியின் குடும்பத்தினர் பணம் செலவழிக்காதும் கஸ்ரப்படாமலும் இருப்பதற்காக, நாசுக்காக, இவர் கனகாலம் உயிர்வாழ மாட்டார் என்று கூறாமல் "அவர் விரும்புகிற சாப்பாட்டைக் குடுங்கோ பிரச்சினையில்லை" என்பர். அதன் பின்னர் அந்தக் குடும்பத்தினருக்கு அவரது நோய்க்குப் பணம் செலவழிக்கும் தேவை இருக்காது. உறவுக்காரர்கள் வந்து பார்ப்பார்கள். சாவு என்பது குடும்பத்துக்குச் சுமையின்றி நடந்தேறும். இறந்தபின்பும் உறவுகள் அனைவரும் சேர்ந்து அடக்கம் செய்தனர். கவிஞர் சு வில்வரத்தினம்



வயோதிபரை அல்லது நோயாளியைச் சுற்றிப் பலர் உழைக்கும் சூழலால் அவர்கள் அதுவரை வாழ்ந்த நாள்களில் அவர்களின் வாழ்வுக்காகச் செலவழித்த பணத்தைவிடப் பெருமளவு பணத்தை நோயுற்ற காலங் களில் செலவிட்டுச் செத்துபோகும் நிலை இன்றைய வாழ்க்கை முறையாக மாறிவிட்டது. சாவு இயற்கIயாகத் தவிர்க்க முடியாதது எனத் தெரிந்திருந்தும் அதற்கு முன்னர் அவர்களின் குடும்பங்கள் பெரும் துன்பப்படுகின்றன. அதைப் பயன்படுத்தி நம்மூர் மருத்துவர்களும் நன்கு பணம் கறந்து விடுகின்றனர்.

## இந்த வாரச் சொல்

### கிள்ளி

இந்தச் சொல் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் வினைச் சொல்லாப் பயன்பாட்டிலுள்ளது. ஏற்கனவேயுள்ள ஏதாவது ஒரு பொருளில் இருந்து குறிப்பிட்டளவு பகுதியைப் பிரித்தெடுப்பதையே கிள்ளி எடுத்தல் என்கிற இந்தச் சொல் மூலம் குறிப்பிடுகிறார்கள். ஆனாலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பயன்படும் இந்தக் கிள்ளுதல் என்கிற சொல் உடலில் கிள்ளுதல் (நுள்ளுதல்) என்கிற அர்த்தத்திலும் பயன்படுகிறது.

"அள்ளுவாரோட இருந்தாலும் கிள்ளுவாரோட இருக்கக் கூடாது"

என்று கூறப்படுவதுண்டு. இதன் அர்த்தம் என்னவெனில், ஒரு பொருளை அப்படியே முழுதுமாக அள்ளியெடுத்துக் கொண்டு போவாரோடு உறவு பேணிக் கொண்டாலும், அந்தப் பொருளைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொண்டுபோவோருடன் உறவு வைத்திருக்கக்கூடாது என்பதாகும். அதாவது கொஞ்சம் கொஞ்சமாகக் கிள்ளி எடுப்பதால் பொருள் குறைவது தெரியாது. மற்றவர்கள் அறியாதவாறு பொருளை இல்லாது செய்து விடுவர் என்பதாகும்.

இதைவிட, "இறைச்சிக் கறியில கொஞ்சம் கிள்ளித் தா"

"சோறு கொஞ்சம் கிள்ளி வை"

"அரிசி அவிஞ்சிற்றோ என்று கிள்ளிப்பார்"

"நெல்லுக் குவியலுக்குள்ள ஆரும் கிள்ளிக் கொண்டுபோனாலும் கண்டுபிடிக்க ஏலாது"

"அப்ப கிள்ளி வைச்ச அரிசிதான் இப்ப உதவுது"

"அதிலை கொஞ்சத்தைக் கிள்ளிப் போடு" என்பவையெல்லாம் குறிப்பிட்ட ஒரு பொருளில் இருந்து சிறு பகுதியைப் பிரித்தெடுப்பதைக் குறிக்கும் கிள்ளுதல்கள் ஆக அமையும்.

"அவளின்ர இடுப்பைக் கிள்ளிப் போட்டான்"

"அவள் செல்லமாகக் கிள்ளினாலும் அவனுக்கு நொந்துபோட்டுது"

ஆகியன உடலைச் சீண்டுதல், நுள்ளுதல் ஆகிய அர்த்தங்களில் பயன்பாட்டிலுள்ளது.

# எமையறிதல்

## 98

ஐயங்கொண்டான் சுவாமிகள்

மனம் இருப்பது எமக்குள்தானே. ஆக எமது செயலைச் சிந்தனைக்கான மையமான மனமே வடிவமைக்கிறது. மனதினது உறைநிலையையும் அதுவே உருவாக்குகிறது. மனம் என்கிற புலப்படா அங்கியை இயங்காதே என்று கட்டுப்படுத்தவோ இயங்கிக்கொண்டே இரு என்று கட்டுப்படுத்தவோ முடியாது. காரணம் கட்டுப்பாட்டைச் செய்யவேண்டிய பொறுப்பிலிருப்பது மனமல்லவா? அது எதை எண்ணுகிறதோ எவ்வாறெண்ணுகிறதோ அவ்வாறே தன்னை இயக்குகிறது அல்லது முடக்குகிறது.

இங்கு செயற்பாட்டு முடக்கத்தை நாமே வலிந்து ஆக்கிக்கொள்வது ஒருநிலைப்படுத்துதல் என்பதாகவும் செயற்படாத முடக்கநிலை என்பதை ஒரு நிலையில் நிற்றல் என்பதாகவும்கூட விளங்கிக் கொள்ள முடியும். இரண்டுமே பாதிப்புகளையே அதிகமாகத்தருவன என்பதைக் கவனத்தில் கொள்ளலாம். இததான் யதார்த்தமானதும்கூட.

மனம் தானாக முடங்கினாலும்சரி நாமாக முடக்கினாலும்சரி அடுத்து ஆகவேண்டியவை ஆகுவதில்லை என்பதுதான் யதார்த்தமாகிறது. குறித்த ஒரு விடயத்தில் எமது கவனம் குவிந்து அவ்விடத்திலேயே தரிப்பதென்பது அடுத்த மற்றும் அதனோடிணைந்து பக்கமாகப் பயணிக்கும் விடயங்கள் எமது கவனத்திலிருந்து கைநழுவிப் போய்விடுகிறது. இவைபற்றி ஏற்கனவே பேசியிருக்கிறோம் எனினும் அவசியம் கருதிமறுபடியும் பேசவேண்டியதாகிறது.

கவனம் குவிக்க வேண்டியதாக குறித்தவொரு விடயம் இருக்கவேண்டுமென்பது முக்கியமானதுதான். ஆனால் குறித்த விடயத்தோடிணைந்ததும் குறித்த சூழல் தொடர்பானதுமான கவனம் இருந்தேயாக வேண்டுமென்பதும் முக்கியமானதுதான். குறித்வோரு இடத்தில் மட்டும் கவனத்தைக் கொண்டிருந்த மனமானது குறித்த செயலில் ஏற்படும் தடங்கல்கண்டு தடுமாறுவதற்கான வாய்ப்புகளே மிகமிக அதிகமாகும். அதனோடிணைந்த அல்லது அப்பாலான ஒரு வழியில் தடங்கலிலிருந்து விடுபடுவதற்கான வழிகளைக் கண்டுபிடிக்க முடியாது தடுமாற்றம் அதிகமாகிவிடுகிறது.

# பழகியிருக்கிறதெண்டது இதைத்தானோ?



**கதிரேசன் காத்தவராயன்**

அண்டைக்கதிலை வாசியடியாலை வீட்டை வரத்தான் செருப்பை அங்கை விட்டிட்டன் எண்டது நினைப்பு வந்துது. திரும்பிப்போனன். அங்கை வல்லியம்மான் சுவாரசியமாய் ஏதொ சொல்ல எல்லாரும் அதுதான் முருகேசர், கனகர், மயிலர், சம்பர், தம்பராக்கள்தான். சுப்பரைக் காணேல்லை.

' என்னம்மான் வலு சந்தோசமாயிருக்கிறியள்?' எண்டு கேட்டன். 'அட.. கதிரேசுவே... போட்டாயெண்டினம்... இப்ப வாறாய்?' எண்டார் என்ரை கேள்விக்குப் பதில் இல்லாமலேயே. 'செருப்பையல்லே விட்டிட்டுப் போட்டன் அதுதான்ஃஃஃ' எண்டன். 'அண்ணை உங்கடை செருப்பை இஞ்சை யாரண்ணை எடுக்க?' எண்டு கனகர் தொடங்க 'மியூசியக்காறர் எடுக்காங்களோ?' எண்டு முருகேசர் முடிச்சார்.

;இஞ்சார் உங்களுக்கு ஒண்டுமாய் விளங்குறதில்லை... இப்ப பழைசுகளைப் புதுசாக்கித்தான் பாவிக்க வேணுமெண்ட நிலைதான்... புதுசுகளெண்டதை மறக்கத்தான்வேணுங்கண்டியளே?' எண்டு கொஞ்சம் கோவமாச் சொன்னார் வல்லியம்மான். 'ஏனம்மான்? நுPங்கள் பழசுகளைக் கொண்டாட வேணுமெண்டிறியள்?' எண்டார் தம்பர்.

'ஆரது தம்பனே... நீ..நீ..உனக்கென்னப்பா தெரியும்? வேளிநாட்டுக் காசிலையல்லே பெண்டில் சீவியம் நடத்துறாள்..உனக்கெங்கையடா நாட்டு நடப்புகள் தெரியப்போகுது?' எண்டு செல்லமாய் தணிக்கைச் சொல்லுகள் ரண்டையும் விட்டார் வல்லியம்மான். 'அம்மான் சொல்லுகிறதுதான் சரி... இப்ப இருக்கிறதை விட படப்போறம் பாருங்கோ பாடு... நாங்கள் கண்டுகொள்ளயில்லை...' எண்டு பெருமூச்சு விட்டார் மயிலர்.

'எல்லாம் நடக்கிற நடப்புகளைப் பாத்தா

தடுமாற்றம் தொடர்கின்றபோது அது குழப்பமாக உருக்கொள்கிறது. அவ்வாறான குழப்பமானது செயலியக்கத்தை முடக்கிவிடுகிறது. ஒருவிதமான முடக்கநிலை உருவாகுவது இயல்பாகிவிடுகிறது. இதுதான் யதார்த்தம். ஆக மனம் இயங்காத நிலை என்பது மொத்தத்தில் ஒரு முழுமையான இயங்காநிலையாகிவிடுகிறது. இப்படியான ஒரு நிலை தேவையானதுதானா? இது மகிழ்வென்பதை அடைய மட்டுமல்ல அறியவாவது அனுமதிக்குமா?

மனமானது அடுத்து என்ன என்கிற விதமாக எண்ண முடியாத ஒரு முடக்க நிலையை பெருமளவில் கற்பிதங்கள் வழியாகவே அடைந்துகொள்கிறது. ஆராய்ந்தறிதல்களுக்கப்பால் எல்லாமே முடியமென்றெண்ணுவதும் மறுதலையாக ஒன்றுமே முடியாதென்றெண்ணுவதும் கற்பிதங்களேதான். முடியும் எதிர் முடியாதென்கிற விடயமானது தன்னிலைசார் மதிப்பீடுகளுக்குப் பதிலாக புறநிலை சார்ந்து பிறருடனான ஒப்பீடுகள் வழியாகவே ஏற்படுத்தப்படுகிறது.

ஒப்பீடுகள் எப்போதுமே சரியான தீர்வுகளைத் தந்துவிடுவதில்லை என்பதைக்கவனத்தில் கொள்வதவசியமானது. ஓப்பீடுகள் தொடர்பாக நாம் ஏற்கனவே பேசியிருக்கிறோம். நூமே உருவாக்கிய கற்பிதங்களை நம்பி இலக்கையடைய முனைகிறோம். இலக்கு தொடர்பாக கற்பிதமான மாயை எம்மைச் சீராக வழிநடாத்துமா?

இலக்கையடைதல் தொடர்பாக கற்பனைப் புள்ளிகள் வழியாக திட்டமிடல் தயாரிப்புகள் செயலொழுங்குகளை வகுத்துக்கொண்டு இலக்கையடைதல் சாத்தியப்படுமா? புதிலாக திசைதவறி அலையவே நேரிடுகிறது. நூம் அங்கலாய்த்து அலையத் தொடங்குகிறோம். இங்கேதான் விந்தையான உணரத்தவறிய விடமுள்ளது. மனம் தான் அடையவேண்டுமென விரும்பிய இலக்கைப் பற்றி தானே தகவல் திரட்டி, திட்டமிட்டு, செயலாற்றி உரிய இலக்கு அடையப்படவில்லை அல்லது உரியபெறுதி கிடைக்கவில்லை என தானே அங்கலாய்க்கிறது. தூனே அலைகிறது.

எம்மிடமே எம்முள்ளேயே இருக்கிற மாய மனம் யாவற்றையும் தானே தீர்மானிக்கிறது. மனத்தை நாம் அறியத்தவறியிருக்கிறோம் என்கிற உண்மையை உணரத்தயங்குகிறோம். எமக்குள்ளேயே இருக்கிற மனத்தை அறிந்துகொள்ள பிறரது உதவியை நாடுகிறோம். இது சிரிப்பை வரவழைக்கவில்லையா? ஒடுக்குதல் ஒடுங்குதல் என எம்மால் அறிய முடியாதிருக்கிற மனத்தை வகைபிரிக்கிறோம். வகைப்படுத்துகிறோம். எமது மனத்தை அறிய நாமாக என்ன செய்திருக்கிறோம்?

எமது மனம் விந்தையானது என்பது பல வேளைகளில் மறந்துபோகிறது. மனத்தை நாங்கள் எங்கே தேடுகிறோம் என்பதிலிருந்து நாம் மனம் பற்றி கொண்டுள்ள அறிவை அளவிடமுடியும். மனம் என்பதை நெஞ்சுக்குள் இருக்கிற ஒன்றாகவே அதுவும் இதயமாகவே புரிந்து வைத்திருக்கிறோம். துவறான புள்ளியிலிருந்து புறப்பட்டு எமது விருப்பு என்கிற (மாயப்) புள்ளியைச் சென்றடைய முயல்கிறோம். நாம்தான் சிந்தனையில் உச்சத்தைத்தொட்ட ஆறாவது அறிவைக் கொண்ட விலங்கு எனப் பெருமையும் பேசத்தயங்குவதோ தவறுவதோ கிடையாது. மனதை நெஞ்சுக்குள் வைத்திருப்பதை சிறுவயது முதலாக ஊட்டப்பட்ட கருத்துருவே முதற்காரணம் என்பதையாவது உணர்ந்துள்ளோமா?

யுHவற்றையும் பிரயோக செயன்முறைப்படுத்துதலுக்கப்பால்தான் விளங்கிவைத்துள்ளோம். கருத்துருக்கள் எப்போதுமே செயனிலைப்பட்டியங்கக்கூடியதாக இருக்குமா? கருத்துநிலை எதிர் செயல்நிலை என வேறுபிரிக்கமுடியுமா? இதில் எது வலியது? பயன்விளைவிப்பது? சிந்திப்போம்.

நாங்கள் விளங்காமலிருக்கிறமெண்டதுதான் உண்மை...சிலவேளையளிலை விளங்காதமாதிரியும்தான் நடக்கப் பாக்கிறம்' எண்டார் முருகேசர். 'உள்ளூர் வருமானங்களை நம்பி இனிமேல் வாழுறதெண்டது கற்பனையிலைன்....' எண்டார் கனகர். 'நம்பியேதாலுஞ் செய்யமுடியுதே? மரக்கறியளைப்பார்.... நாளுக்கொரு விலை...கமக்காறரிட்டை ஒரே விலைதான்...அங்காலை கைமாறுகிறதல்லே அங்கைதான் பிரச்சனை...கமக்காறற்ரை நிலையைப்பாரன் என்னதான் செய்யிறது?' எண்டார் வல்லியம்மான்.

'மண்ணெண்ணை தட்டுப்பாடு... விலைப் பிரச்சனையெண்டு கறன்ரை நம்பினால்.. இப்ப போகிற போக்கிலை கறன்ற் இறைப்புக்கும் பிரச்சனையாகப் போகுது...' எண்டு நான் சொல்லி முடிக்கயில்லை 'தண்ணியை விட்டாக் காணுமோ கதிரேசு? முரந்து பசளை அதுஇதுவெண்டு என்னெண்டாலும் வாங்கிற மாதிரியே கிடக்குது?' எண்டார் முரகெசர்.

'குப்பை கஞ்சல் எண்டிறாங்கள்... இப்பத்தையான் குப்பையை பயிர் காணியளிலை போடலாமோ? சொப்பிங்பையளும் பிளாஸ்ரிக் குப்பையளும்தானே... குழை தாக்கலா மெண்ணுகினம்... குழையை எங்கை வெட்டிறது?' எண்டார் மயிலர் எரிச்சலோடை. 'பழசு பழசெண்டு அலையிறன் எண்டல்லே சிரிச்சனிங்கள்... இப'ப விளங்கூதே?' எண்டார் வல்லியர்.

'இனி கறன்ற் தொடந்து வருமா மல்லே?' எண்டார் திடீரெண்டு தம்பர். 'சோதினைக் காலத்திலை இல்லாதது...தேவைக்கில்லாதது இருந்தென்ன விட்டென்ன?' எண்டார் கனகர். 'உனக்கொண்டும் விளங்கிறயில்லை எண்டல்லே இப்பதான் சொல்லிவாய் மூடயில்லை.... (தணிக்கைச் சொற்கள்) கறன்றை பாவிக்கிறதே கஸ்டமெண்டளவிலையல்லே கட்டணங்கள் காட்டற்றாக் வாறமாதிரி கூடியிருக்கு...'எண்டு வல்லியர் முடிக்கயில்லை 'கறன்ற் இருந்தென்ன போயென்ன?' எண்டு முடிச்சார் முருகேசர்.

'நல்லகாலம் வாங்கி வைச்சிருக்கேலாத சாமானாப் போச்சுது கறன்ற்... இல்லையெண்டால் வாங்கிப் பதுக்கியிருப்பங்கள்....' எண்டு நான் சொல்லிக்கொண்டிருக்க 'கனக்க கூப்பனுகளும் கிழிஞ்சிருக்கும்' எண்டு முருகேசர் சொன்னதுக்கு எல்லாரும் சிரிச்சினம். 'பெற்றோலை பதுக்கினதாலை கனபேர் செத்ததைச் சொல்லுறியளோ?' எண்டு தம்பர் வல்லியரைப் பாத்துப்போட்டுக் கெட்டார்.

'அந்த ஜாம்போத்தில் விளக்கைச் செய்யிறதெண்டாலும்... இப்ப வாறதெல்லாம் பிளாஸ்ரிக்கிலையல்லே வருகுது...' எண்டார் மயிலர். 'கண்ணாடிப் போத்திலெண்டது அனேகமாச் சாராயத்துக்கெண்ட மாதிரியல்லே கிடக்குது?' எண்டு கனகர் புறுபுறுத்தார். 'நாங்கள் முந்திப் பாவிச்ச ஜாம் போத்தல் விளக்கெண்டு மருமென் ரண்டு விளக்குகளை சோக்கேசுக்குள்ளை வைச்சிருக்கிறார்... பேத்தி அதைப்பாத்து தேப்பனை நக்கலடிக்கிறவள்... இனி அதுதான் அவளுக்கும் உதவப்போகுது...' எண்டு சொல்லிக்கொண்டிருக்க பெருமூச்சொண்டு தானாய்ப் போச்சுது.

'ஒருவழியாலும் பிளைப்புநடத்த முடியாது...'எண்டு மயிலர் முணுமுணுக்க 'மயிலு...உந்த (தணிக்கை) உதுகளை எப்ப கண்டனி...?' எண்டு வலிலியம்மான் பேசினர். 'எல்லாத்தையும் பழகினமாதிரி இனி வாறதுகளையும் பழகிறதுதான் வழி' எண்டு கொண்டு வந்திட்டன்.

---

சமையல் சமையல்



# குறிஞ்சா வறை...!

குறிஞ்சா இலைப் பிட்டுப் பற்றி இந்தப் பகுதியில் பார்த்திருக்கிறோம். இந்த முறை குறிஞ்சா இலையில் வறை செய்வது எப்படி என்று பார்ப்போம். நீரிழிவு நோய்க்குத் தீர்வாகக் குறிஞ்சாவை வைத்தியர்கள் பரிந்துரைக்கிறார்கள். அத்தோடு குடற்புண் பிரச்சினைகளுக்கும் குறிஞ்சா தீர்வளிக்கிறது. சிறு குறிஞ்சா எனவும் இதைச் சொல்கிறார்கள்.

**தேவையான பொருள்கள்**

குறிஞ்சா இலைகள் - 20 தொடக்கம் 30 வரையில்

பச்சை மிளகாய் - 3

செத்தல் மிளகாய் - 3

உள்ளி - 5 பற்கள்

தேங்காய்த் துருவல் - கைப்பிடியளவு

உழுத்தம் பருப்பு - 2 தேக்கரண்டியளவு

வெங்காயம் - 2

சீரகம் - ஒரு தேக்கரண்டி

தேங்காய் எண்ணை, உப்பு சிறிதளவு



**எப்படிச் செய்வது...?**

குறிஞ்சா இலைகளை நன்கு சுத்தப்படுத்தி அவற்றின் தண்டுகளை நறுக்கிக் கொள்ளுங்கள். இலைகளை ஒன்றின் மீது ஒன்றாக அடுக்கி வறைப்பு அரிவதுபோல அரிந்து கொள்ளுங்கள்.சட்டி ஒன்றில் சிறிதளவு எண்ணை விட்டு உழுத்தம் பருப்பு, செத்தல் மிளகாய், உள்ளி, பச்சை மிளகாய், சிரகம் ஆகியவற்றைப் போட்டுத் தாழித்துக் கொள்ளுங்கள். பின்னர் வெங்காயத்தைச் சேர்த்துத் தாழியுங்கள். தாழித் ததும் அரிந்து வைத்திருக்கிற குறிஞ்சா இலைகளைப் போட்டுக் கிளறுங்கள். பின்னர் தேங்காய்ப்பூவைச் சேருங்கள். உப்பை ஏற்றளவுக்குப் போடுங்கள். நன்கு கிளறிப் பச்சை வாசனை போகும்வரை வேகவிடுங்கள். சுவைமிகுந்த குறிஞ்சா இலை வறை தயார்.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.02.2023 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781